**CO**

# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு-2020

Reg.No. [ | | | | | ]

## பன்னிரெண்டாம் வகுப்பு

## கணக்குப்பதிவியல்

*நேரம்: 3.00 மணி* *மதிப்பெண்கள்: 90*

### பகுதி - I

20 x 1 = 20

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது
   a) மொத்தக் கடனாளிகள் கணக்கு b) மொத்தக் கடனீந்தோர் கணக்கு
   c) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு d) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு
2. தொடக்க முதல் ரூ.10,000, அவ்வாண்டின் எடுப்புகள் ரூ.6,000, அவ்வாண்டின் இலாபம் ரூ.2,000 மற்றும் கொண்டு வந்த கூடுதல் முதல் ரூ.3,000 எனில் இறுதி முதல் காணவும்.
   a) ரூ.9,000 b) ரூ.11,000 c) ரூ.21,000 d) ரூ.3,000
3. வருவாய் மற்றும் செலவினக்கணக்கு தயாரிக்கப்படுவதன் மூலம் கண்டறியப்படுவது
   a) இலாபம் (அ) நட்டம் b) ரொக்கம் (ம) வங்கி இருப்பு
   c) உபரி (அ) பற்றாக்குறை d) நிதிநிலை
4. சிறப்பு நிதி பெற்றது ஒரு ________.
   a) வருவாயின வரவு b) முதலின வரவு c) வருவாயின செலவு d) முதலினச் செலவு
5. பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
   a) எடுப்புகள் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   b) முதல் மீது வட்டி - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
   c) கடன் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
   d) இலாபப் பகிர்வு - முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
6. கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது
   a) சம்பளம் b) கழிவு c) கடன் மீது வட்டி d) முதல் மீது வட்டி
7. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
   a) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து b) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து
   c) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து d) நற்பெயரினை வாங்க முடியாது
8. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ரூ.1,00,000; சொத்துகள் ரூ.1,50,000 மற்றும் பொறுப்புகள் ரூ.80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு
   a) ரூ.40,000 b) ரூ.70,000 c) ரூ.1,00,000 d) ரூ.30,000
9. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் ஒப்பீடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டைப் பயன்படுத்தி தெரிவு செய்யவும்.

| பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|
| i) தியாக விகிதம் | - | 1. முதலீட்டு மாறுபடும் நிதி |
| ii) பழைய இலாபப் பகிர்வு விகிதம் | - | 2. பகிர்ந்து தரா இலாபம் |
| iii) மறுமதிப்பீட்டுக் கணக்கு | - | 3. நற்பெயர் |
| iv) முதல் கணக்கு | - | 4. பதிவுறா பொறுப்பு |

| | (i) | (ii) | (iii) | (iv) |
|---|---|---|---|---|
| a) | 1 | 2 | 3 | 4 |
| b) | 3 | 2 | 4 | 1 |
| c) | 4 | 3 | 2 | 1 |
| d) | 3 | 1 | 4 | 2 |

10. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
    a) மறுமதிப்பீட்டு இலாபம் b) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்
    c) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் d) முதலீட்டு மாறுபடும் நிதி
11. மறுமதிப்பீட்டின் போது பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது
    a) ஆதாயம் b) நட்டம் c) இலாபம் d) மேற்கண்ட எதுவுமில்லை

12. A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். B ன் விலகலின் போது நிறுவனத்தின் நற்பெயர் ரூ.30,000 என மதிப்பிடப்பட்டது. கூட்டாளி B க்கு ஈடு செய்வதற்கு A மற்றும் C யின் பங்களிப்பைக் கண்டறியவும்.
   a) ரூ.20,000 மற்றும் ரூ.10,000
   b) ரூ.8,000 மற்றும் ரூ.4,000
   c) ரூ.10,000 மற்றும் ரூ.20,000
   d) ரூ.15,000 மற்றும் ரூ.15,000

13. முன்னுரிமைப் பங்கு என்பது
   i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் செலுத்துவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
   ii) கலைப்பின் போது பங்கு முதலை திரும்பப் பெறுவதற்கான முன்னுரிமைப் பெற்ற பங்கு
   a) (i) மட்டும் சரியானது
   b) (ii) மட்டும் சரியானது
   c) (i) மற்றும் (ii) சரியானது
   d) (i) மற்றும் (ii) தவறானவை

14. சுப்ரீம் நிறுமம் பங்கொன்று ரூ.10 மதிப்புடைய 100 பங்குகளை இறுதி அழைப்புத் தொகை ரூ.2 செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்தது. அவை அனைத்தும் பங்கொன்று ரூ.9 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. முதலினக் காப்புக்கு மாற்றப்பட வேண்டிய தொகை
   a) ரூ.700
   b) ரூ.800
   c) ரூ.900
   d) ரூ.1,000

15. ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ரூ.80,000. இரண்டாம் ஆண்டில் செலவுகள் ரூ.88,000 ஆக அதிகரித்திருந்தது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன?
   a) 10%
   b) 110%
   c) 90%
   d) 11%

16. பொது அளவு அறிக்கைகள் எத்தனை பத்திகளுடன் தயாரிக்கப்படுகின்றன?
   a) இரண்டு
   b) மூன்று
   c) நான்கு
   d) ஐந்து

17. சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ள நடப்புச் சொத்துகள் அழைக்கப்படுவது
   a) காப்புகள்
   b) புலனாகும் சொத்துகள்
   c) நிதி
   d) விரைவு சொத்துகள்

18. நடப்புப் பொறுப்பு ரூ.40,000. நடப்புச் சொத்து ரூ.1,00,000. சரக்கிருப்பு ரூ.20,000 எனில் விரைவு விகிதம் ________.
   a) 1 : 1
   b) 2.5 : 1
   c) 2 : 1
   d) 1 : 2

19. எதிர்ப்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?
   a) தலைமைப் பதிவு
   b) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்
   c) அறிக்கைகள்
   d) சொத்துகள் கடனுக்கு வாங்கியது

20. அறைகலன் கடனுக்கு வாங்கியதை Tally-ல் எந்த வகை சான்றாவணத்தில் பதியப்படும்?
   a) பெறுதல் சான்றாவணம்
   b) உரிய குறிப்பேடு சான்றாவணம்
   c) கொள்முதல் சான்றாவணம்
   d) பெறுதல்கள் சான்றாவணம்

## பகுதி - II

**II. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 30 கட்டாய வினா)* 7 x 2 = 14

21. விடுபட்ட தகவல் காண்க:

| | | |
|---|---|---|
| இறுதி முதல் | ரூ. | 2,00,000 |
| எடுப்புகள் | ரூ. | 30,000 |
| கூடுதல் முதல் | ரூ. | 10,000 |
| இலாபம் | ரூ. | 1,20,000 |
| தொடக்க முதல் | | ? |

22. இலாப நோக்கற்ற அமைப்பின் வருவாயின வரவுகளில் ஏதேனும் நான்கினைத் தரவும்.

23. ஒரு நிறுவனத்தின் கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் பின்வருமாறு:
2015 - ரூ.15,000 ; 2016 - ரூ.17,000 ; 2017 - ரூ.6,000 (நட்டம்) 2018 - ரூ.14,000
4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

24. அருள் மற்றும் அனிதா என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை 4:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 31.3.2018 அன்று புதிய கூட்டாளியாக அஜய் என்பவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார். சேர்க்கையின் போது நிறுவன ஏடுகளில் ரூ.42,000 எனக் காட்டியது. பொதுக்காப்பினை பகிர்ந்தளிப்பதற்கான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும்.

25. ஆர்யா, பெனின் மற்றும் சார்லஸ் என்ற கூட்டாளிகள் முறையே 3:3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்களில் சார்லஸ் என்பவர் விலகினார். அவருடைய பங்கு முழுவதையும் ஆர்யா எடுத்துக் கொண்டார். ஆர்யா மற்றும் பெனின் ஆகியோரின் புதிய இலாப விகிதம் மற்றும் ஆதாய விகிதத்தைக் கணக்கிடவும்.

26. பங்குகள் ஏன் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன?

27. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளைப் பட்டியலிடவும்.

28. கீழ்க்கண்ட தகவல்களிலிருந்து விரைவு விகிதத்தைக் கணக்கிடவும். மொத்த நடப்புப் பொறுப்புகள் ரூ.2,40,000; மொத்த நடப்புச் சொத்துகள் ரூ.4,50,000; சரக்கிருப்பு ரூ.70,000; முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் ரூ.20,000

29. தானியங்கும் கணக்கியல் முறை என்றால் என்ன?

30. கூட்டாளி ஒருவருக்கு முதல் மீது வட்டி அனுமதிக்க மேற்கொள்ள வேண்டிய குறிப்பேட்டுப் பதிவு என்ன?

## பகுதி - III

**III. எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 40 கட்டாய வினா)* 7 x 3 = 21

31. முழுமை பெறா பதிவேடுகளின் குறைபாடுகள் யாவை? (ஏதேனும் 3)

32. பின்வரும் விவரங்கள் ஒரு சங்கத்தின் 2019 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும்?

2019 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய
பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

| பெறுதல்கள் | ரூ. | ரூ. | செலுத்தல்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| சந்தா | | | | |
| 2017 - 2018 | 5,000 | | | |
| 2018 - 2019 | 48,000 | | | |
| 2019 - 2020 | 3,000 | 56,000 | | |

இச்சங்கத்தில் 300 உறுப்பினர்கள் உள்ளனர். ஒவ்வொருவரும் ஆண்டுச் சந்தாவாக ரூ.200 செலுத்துகின்றனர். இன்னும் பெற வேண்டிய 2017-18 ஆம் ஆண்டுக்கான சந்தா ரூ.1,000

33. கவிதா என்பவர் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளி. அவர் வழக்கமாக ஒவ்வொரு மாதமும் ரூ.2,500 எடுத்துக் கொள்கிறார். எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 4% கணக்கிடப்பட வேண்டும். எடுப்புகள் மீது வட்டி சராசரி கால முறையைப் பயன்படுத்தி கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் கணக்கிடவும். அவர்

i) ஒவ்வொரு மாதத் தொடக்கத்தில் எடுத்திருந்தால்
ii) ஒவ்வொரு மாத இடையில் எடுத்திருந்தால்
iii) ஒவ்வொரு மாத இறுதியில் எடுத்திருந்தால்

34. புதிய கூட்டாளி ஒருவரை சேர்ப்பதற்காக, ஒரு நிறுவனம் 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டு சராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரை மதிப்பிட முடிவு செய்தது. கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் மற்றும் அந்தந்த ஆண்டுகளுக்கான நிறைகள் பின்வருமாறு:

| விவரம் | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| இலாபம் ரூ. | 20,000 | 22,000 | 24,000 | 28,000 |
| நிறை | 1 | 2 | 3 | 4 |

நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

35. ஹரி, மாதவன் மற்றும் கேசவன் ஆகிய கூட்டாளிகள் இலாப நட்டங்களை 5:3:2 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2017, ஏப்ரல் 1 அன்று வான்மதி புதிய கூட்டாளியாக சேர்ந்த பின் அவர்களின் இலாப விகிதம் 4:3:2:1 என முடிவு செய்யப்பட்டது. பின்வரும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.
   a) வளாகத்தின் மதிப்பு ரூ.60,000 அதிகரிக்கப்பட்டது.
   b) சரக்கிருப்பு மீது ரூ.5,000, அறைகலன் மீது ரூ.2,000, இயந்திரம் மீது ரூ.2,500 தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.
   c) கொடுபட வேண்டிய பொறுப்பு ரூ.500 உருவாக்கப்பட வேண்டும்.
   மறுமதிப்பீட்டுக் கணக்கினைத் தயார் செய்யவும்.

36. வெளிச்செல்லும் கூட்டாளிக்குச் செலுத்த வேண்டிய தொகையினை எவ்வாறு தீர்வு செய்யலாம்?

37. சாரா நிறுமம் பங்கொன்று ரூ.10 வீதம் 10,000 நேர்மைப் பங்குகளை விண்ணப்பத்தின் போது முழுத் தொகையும் செலுத்தும் வகையில் பங்கொன்று ரூ.2 முனைமத்தில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தரவும்.

38. மரியா வரையறு நிறுமத்தின் 2018 மார்ச் 31-ஆம் நாளைய பொது அளவு இருப்புநிலைக்குறிப்பு தயார் செய்யவும்.

| | விவரம் | 2018 மார்ச் 31 ரூ. |
|---|---|---|
| I. | <u>பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்</u> | |
| | பங்குதாரர் நிதி | 4,00,000 |
| | நீண்ட காலப் பொறுப்புகள் | 3,20,000 |
| | நடப்புப் பொறுப்புகள் | 80,000 |
| | மொத்தம் | 8,00,000 |
| II. | <u>சொத்துகள்</u> | |
| | நிலைச் சொத்துகள் | 6,00,000 |
| | நடப்புச் சொத்துகள் | 2,00,000 |
| | மொத்தம் | 8,00,000 |

39. ஒரு வணிக நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து நிகர இலாப விகிதம் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. |
|---|---|
| விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் | 9,60,000 |
| விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை | 5,50,000 |
| அலுவலக மற்றும் நிர்வாகச் செலவுகள் | 1,45,000 |
| விற்பனை மற்றும் பகிர்வுச் செலவுகள் | 25,000 |

40. Tally ERP 9 ல் பொதுவாக பயன்படுத்தப்படும் சான்றாவணங்களின் வகைகளைக் குறிப்பிடவும்.

## பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 7 x 5 = 35

41. a) பின்வரும் விவரங்களிலிருந்து மொத்த விற்பனையைக் கணக்கிடுக.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| 2018 ஏப்ரல் 1 அன்று கடனாளிகள் | 2,50,000 | பெறுதற்குரிய மா.சீட்டு மறுக்கப்பட்டது | 15,000 |
| 2018 ஏப்ரல் 1 அன்று பெ.மா.சீட்டுகள் | 60,000 | உள் திருப்பம் | 50,000 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 7,25,000 | 2019 மார்ச் 31 அன்று பெ.மா.சீட்டு | 90,000 |
| பெ.மா.சீட்டுக்காக ரொக்கம் பெற்றது | 1,60,000 | 2019 மார்ச் 31 அன்று கடனாளிகள் | 2,40,000 |
| வாராக்கடன் | 30,000 | ரொக்க விற்பனை | 3,15,000 |

*(அல்லது)*

b) அருணா நிறுமத்தின் பின்வரும் தகவல்களிலிருந்து (i) சரக்கிருப்பு சுழற்சி விகிதம் (iii) கணக்குகள் மூலம் பெற வேண்டியவைகளின் சுழற்சி விகிதம் (iii) நிலைச்சொத்துகள் சுழற்சி வீகிதம் கணக்கிடவும்.

| விவரம் | 2018 மார்ச் 31 ரூ. | 2019 மார்ச் 31 ரூ. |
|---|---|---|
| சரக்கிருப்பு | 3,60,000 | 4,40,000 |
| கணக்குகள் மூலம் பெற் வேண்டியவைகள் | 7,40,000 | 6,60,000 |
| நிலைச்சொத்துகள் | 6,00,000 | 8,00,000 |

கூடுதல் தகவல்கள்:

i) அவ்வாண்டில் விற்பனையிலிருந்து பெற்ற வருவாய் ரூ.35,00,000

ii) விற்பனையிலிருந்து பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ரூ.16,00,000.

விற்பனை, கடன் விற்பனை என எடுத்துக்கொள்ளவும்.

42. a) கீழ்க்காணும் தகவல்களிலிருந்து கடலூர் கபடி மன்றத்தின் 2019 மார்ச் மார்ச்31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கை தயார் செய்யவும்.

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு (1.4.2018) | 11,000 | வட்டி (ம) வங்கி கட்டணம் | 250 |
| வங்கி மேல்வரைப்பற்று (1.4.2018) | 20,000 | இதர வருமானம் | 350 |
| எழுதுபொருள் வாங்கியது | 5,200 | மைதானம் பராமரிப்பு | 550 |
| பயணச் செலவுகள் | 1,800 | அரசிடமிருந்து பெற்ற மானியம் | 12,000 |
| பங்காதாயம் பெற்றது | 3,000 | தொலைபேசி கட்டணம் | 2,800 |
| பொதுச் செலவுகள் | 500 | அறக்கட்டளை நிதி பெற்றது | 10,000 |
| சேர்க்கைக் கட்டணம் | 4,000 | காப்பீட்டு முனைமம் செலுத்தியது | 2,000 |
| தூது அஞ்சல் செலவுகள் | 2,000 | மின் கட்டணம் செலுத்தியது | 5,000 |
| நகராட்சி வரி செலுத்தியது | 3,000 | ரொக்க இருப்பு (31.3.2019) | 1,750 |

*(அல்லது)*

b) பின்வரும் தகவல்களிலிருந்து கவிதா நிறுமத்தின் போக்கு சதவீதங்களைக் கணக்கிடவும்.

| விவரம் | ரூ. ஆயிரத்தில் | | |
|---|---|---|---|
| | 2015-16 | 2016-17 | 2017-18 |
| விற்பனை மூலம் பெற்ற வருவாய் | 100 | 125 | 150 |
| இதர வருமானம் | 20 | 25 | 30 |
| செலவுகள் | 100 | 120 | 80 |
| வருமான வரி | 30% | 30% | 30% |

43. a) அகமது முறையான கணக்கேடுகளைப் பராமரிப்பதில்லை 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய இலாபம் (அ) நட்டம் கண்டறிக.

| விவரம் | 1.4.2017 ரூ. | 31.3.2018 ரூ. |
|---|---|---|
| வங்கி இருப்பு | 14,000 (Cr.) | 18,000 (Dr.) |
| கை ரொக்கம் | 800 | 1,500 |
| சரக்கிருப்பு | 12,000 | 16,000 |
| கடனாளிகள் | 34,000 | 30,000 |

| | | |
|---|---|---|
| பொறித்தொகுதி | 80,000 | 80,000 |
| அறைகலன் | 40,000 | 40,000 |
| கடனீந்தோர் | 60,000 | 72,000 |

அகமது தனது சொந்தப் பயனுக்காக ரூ.40,000 எடுத்துக் கொண்டார். தன்னுடைய வியாபாரத்தை விரிவுபடுத்த ரூ.16,000 கூடுதல் முதல் இட்டார். கடனாளிகள் மீது 5% ஒதுக்கு உருவாக்க வேண்டும். பொறித்தொகுதி மீது 10% தேய்மானம் நீக்குக.

*(அல்லது)*

b) கீழ்க்கண்ட நிலைகளில் இயக்க இலாப விகிதம் காணவும்.

நிலை 1 : விற்பனை மூலம் பெற்ற வருவாய் ரூ.10,00,000
இயக்க இலாபம் ரூ.1,50,000

நிலை 2 : விற்பனை மூலம் பெற்ற வருவாய் ரூ.15,00,000
இயக்க அடக்கம் ரூ.12,00,000

நிலை 3 : விற்பனை மூலம் பெற்ற வருவாய் ரூ.20,00,000
மொத்த இலாபம் விற்பனை மூலம் பெற்ற வருவாயில் 30% இயக்கச் செலவுகள் ரூ.4,00,000

44. a) கீழ்க்காணும் கும்பகோணம் கூடைப்பந்து சங்கத்தில் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்.

| பெறுதல்கள் | | ரூ. | செலுத்தல்கள் | | ரூ. |
|---|---|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | | | மைதான வாடகை செலுத்தியது | | 12,000 |
| கை ரொக்கம் | 23,000 | | அச்சுக்கட்டணம் | | 5,000 |
| வங்கி ரொக்கம் | 12,000 | 35,000 | வங்கிக் கட்டணம் | | 1,000 |
| அரங்க வாடகை பெற்றது | | 6,000 | கட்டிடம் மீதான காப்பீடு | | 2,000 |
| சந்தா பெற்றது | | 9,000 | தொடர் விளையாட்டுப் போட்டிச் செலவுகள் | | 2,000 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | | 7,000 | | | 16,000 |
| பாதுகாப்புபெட்டகவாடகைபெற்றது | | 2,000 | தணிக்கைக் கட்டணம் | | 3,000 |
| | | | விளையாட்டுப் பொருட்கள் வாங்கியது | | 4,000 |
| | | | இருப்பு கீ/இ | | |
| | | | கை ரொக்கம் | 2,000 | |
| | | | வங்கி ரொக்கம் | 14,000 | 16,000 |
| | | 59,000 | | | 59,000 |

*(அல்லது)*

b) கௌதம் வரையறு நிறுமம், இராகவ் அவர்களின் ரூ.10 மதிப்பிலான 500 நேர்மைப் பங்குகளின் இறுதி அழைப்பு ரூ.2 செலுத்தாத காரணத்தால் ஒறுப்பிழப்பு செய்தது. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகள், மதன் என்பவருக்கு பங்கு ஒன்று ரூ.8 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டிற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

45. a) ஆனந்த் மற்றும் நாராயணன் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் தங்கள் இலாப நட்டங்களை 5:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வருகின்றனர். 2018, ஜனவரி 1 அன்று அவர்களுடைய முதல் முறையே ரூ.50,000 மற்றும் ரூ.30,000. கூட்டாண்மை ஒப்பாவணம் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறது.

i) முதல் மீது வட்டிக்கு 6% அனுமதிக்க வேண்டும்.

ii) ஆனந்த் மற்றும் நாராயணனுக்கு விதித்த எடுப்புகள் மீதான வட்டி முறையே ரூ.1,000 மற்றும் ரூ.800

iii) முதல் மீது வட்டி மற்றும் எடுப்புகள் மீதான வட்டி கழிப்பதற்கு முன் உள்ள நிறுவனத்தின் நிகர இலாபம் ரூ.35,000

கூட்டாளிகளுடைய முதல், மாறுபடும் முதல் எனக் கொண்டு தேவையான குறிப்பேட்டுப் பதிவினைத் தரவும் மற்றும் 2018 டிசம்பர் 31 ஆம் நாளைய இலாப நட்டப் பகிர்வு கணக்கையும் தயார் செய்யவும்.

*(அல்லது)*

b) மணி, ரமா மற்றும் தேவன் ஆகியோர் ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள் தங்கள் இலாப நட்டங்களை முறையே 4:3:3 என்ற விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். அவர்களின் 2019, மார்ச் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | | கட்டிடம் | 80,000 |
| மணி | 50,000 | | சரக்கிருப்பு | 20,000 |
| ரமா | 50,000 | | அறைகலன் | 70,000 |
| தேவன் | 50,000 | 1,50,000 | கடனாளிகள் | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | | 20,000 | கை ரொக்கம் | 10,000 |
| இலாப நட்ட க/கு | | 30,000 | | |
| | | 2,00,000 | | 2,00,000 |

பின்வரும் சரிக்கட்டுதல்களுக்குட்பட்டு மணி 31.3.2019 அன்று கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார்.

i) சரக்கிருப்பில் ரூ.5,000 மதிப்பு குறைக்கப்பட வேண்டும்.
ii) வாரா ஐயக்கடனுக்கு ரூ.1,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.
iii) கட்டிடத்தின் மதிப்பு ரூ.16,000 அதிகரிக்கப்பட வேண்டும்.
iv) மணிக்கு சேர வேண்டிய தொகை உடனடியாக செலுத்தப்படவில்லை.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி விலகலுக்குப் பின் உள்ள முதல் கணக்கினைத் தயாரிக்கவும்.

46. a) பின்வரும் தகவல்களிலிருந்து ரூபன் மற்றும் டெரி அவர்களின் முதல் நிலை முதல் எனக் கொண்டு அவர்களின் முதல் கணக்குகளைத் தயாரிக்கவும்.

| விவரம் | ரூபன் ரூ. | டெரி ரூ. |
|---|---|---|
| 2018, ஏப்ரல் 1 அன்று முதல் | 70,000 | 50,000 |
| 2018 ஏப்ரல் 1 அன்று நடப்புக் கணக்கு (வ) | 25,000 | 15,000 |
| கூடுதல் முதல் கொண்டு வந்தது | 18,000 | 16,000 |
| 2018 - 2019 ல் எடுப்புகள் | 10,000 | 6,000 |
| எடுப்புகள் மீது வட்டி | 500 | 300 |
| இலாபப் பங்கு (2018 - 2019) | 35,000 | 25,800 |
| முதல் மீது வட்டி | 3,500 | 2,500 |
| சம்பளம் | — | 18,000 |
| கழிவு | 12,000 | — |

*(அல்லது)*

b) சம்பத் நிறுமம் 25,000 பங்குகளை, பங்கு ஒன்று ரூ.10 என பொதுமக்களுக்கு வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ.3, ஒதுக்கீட்டின் போது ரூ.4, முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.3 செலுத்தப்பட வேண்டும். பொதுமக்களால் 24,000 பங்குகள் ஒப்பப்பட்டன. இயக்குனர்கள் அனைத்து பங்குகளையும் ஒதுக்கீடு செய்தனர். அதற்காக தொகை முழுவதும் முறையாகப் பெறப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும்.

47\. a) அமல் மற்றும் விமல் இருவரும் ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளிகள். அவர்கள் 7:5 என்ற விகிதத்தில் இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்து வந்தனர். 2019, மார்ச் 31 அன்றைய

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் கணக்குகள் | | கட்டிடம் | 80,000 |
| அமல் 70,000 | | அறைகலன் | 20,000 |
| விமல் 50,000 | 1,20,000 | சரக்கிருப்பு | 25,000 |
| பற்பல கடனீந்தோர் | 30,000 | கடனாளிகள் | 30,000 |
| இலாப நட்டக் க/கு | 24,000 | வங்கி | 19,000 |
| | 1,74,000 | | 1,74,000 |

1.4.2019 இல் நிர்மல் புதிய கூட்டாளியாக சேருகிறார். அவர் ரூ.30,000 முதலுடன் எதிர்கால இலாபங்களில் 1/3 விகிதத்தில் பின்வரும் சரிக்கட்டலுடன் கூட்டாளியாகிறார்.

a) சரக்கிருப்பின் மதிப்பு ரூ.5,000 குறைக்கப்பட வேண்டும்.

b) வாரா ஐயக்கடன் ஒதுக்கு ரூ.3,000 உருவாக்கப்பட வேண்டும்.

c) கட்டிடம் ரூ.20,000 மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்.

மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் கூட்டாளி சேர்க்கைக்கு பின்பான கூட்டாளி முதல் கணக்கு தயார் செய்யவும்.

*(அல்லது)*

b) சந்திரா நிறுமத்தின் பின்வரும் இருப்புநிலைக்குறிப்பிலிருந்து 2016 மார்ச் 31 மற்றும் 2017 மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய ஒப்பீட்டு இருப்புநிலைக் குறிப்பினைத் தயார் செய்யவும்.

| | விவரம் | 2016 மார்ச் 31 ரூ. | 2017 மார்ச் 31 ரூ. |
|---|---|---|---|
| I. | <u>பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புகள்:</u> | | |
| | பங்குதாரர் நிதி | 1,00,000 | 2,60,000 |
| | நீண்ட காலப் பொறுப்புகள் | 50,000 | 60,000 |
| | நடப்புப் பொறுப்புகள் | 25,000 | 30,000 |
| | மொத்தம் | 1,75,000 | 3,50,000 |
| II. | சொத்துகள் | | |
| | நிலைச்சொத்துகள் | 1,00,000 | 2,00,000 |
| | நடப்புச் சொத்துகள் | 75,000 | 1,50,000 |
| | மொத்தம் | 1,75,000 | 3,50,000 |

*******